பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
05 06 2025 **THURSDAY 6.30 PM**
மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- அன்னையின் பெயரில் மரம் நடும் இயக்கத்தில் இளையோர் கூடுதலாக பங்கேற்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.
- அரசு சேவைகளை வழங்குவதில் வெளிப்படைத்தன்மையை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
- நாட்டு நலனை மட்டுமே கருத்தில்கொண்டு பிரதமர் திரு நரேந்திர மோடி அயராது பாடுபட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திரு எல்.முருகன் தெரிவித்துள்ளார்.
- விவசாயிகள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்பட்டு வருவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.
- உலகக்கோப்பை வில்வித்தை போட்டியின் மகளிர் குழு பிரிவில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

அன்னையின் பெயரில் ஒரு மரம் நடும் இயக்கத்தில் இளையோர் கூடுதலாக பங்கேற்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச சுற்றுச்சூழல் தினத்தையொட்டி, இன்று புதுதில்லியில் நடைபெற்ற மரம் நடும் நிகழ்ச்சியில் பங்கேற்ற பின்னர் சமூக வலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நகர்ப்புறங்களில் இடநெருக்கடியை கருத்தில்கொண்டு, மரம் நடும் பணிகளில் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

சுற்றுச்சூழலை பாதுகாக்க அனைவரும் பங்களிக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று புதுதில்லியில் அன்னையின் பெயரில் ஒரு மரம் நடும் இரண்டாம் கட்ட இயக்கத்தில் பங்கேற்று அவர் பேசினார்.

சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் பிளாஸ்டிக் குறைப்பு முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனை கருத்தில்கொண்டு ஒரு முறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களை பொதுமக்கள் தவிர்க்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மரக்கன்றுகளை நடுவது சுற்றுச்சூழலை பாதுகாக்க உதவிடும் என்றும் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கத்தின்கீழ், வேளாண் விஞ்ஞானிகள் விவசாயிகளை நேரடியாக சந்தித்து புதிய தொழில்நுட்பங்கள் குறித்து எடுத்துரைத்து வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

இந்த இயக்கத்தின்கீழ், பஞ்சாப் மாநிலத்தில் உள்ள விவசாயிகளுடன் கலந்துரையாடிய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

விவசாயிகளுக்கு உரிய ஆலோசனைகளை வேளாண் விஞ்ஞானிகள் வழங்கி வருவதாகவும் அவர் கூறினார்.

வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதற்கும், விவசாயிகள் குறைந்த செலவில் கூடுதல் வருவாயை பெறுவதற்கும் இந்த பிரச்சார இயக்கம் உதவிடும் என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

அரசு சேவைகளை வழங்குவதில் வெளிப்படைத்தன்மையை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், நேரடி பணப்பரிமாற்றத் திட்டத்தின்கீழ், ஆயிரத்து 200 திட்டங்கள் இணைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம், 44 லட்சம் கோடி ரூபாய் பயனாளிகளின் வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக, அரசுக்கு 3 லட்சத்து 48 ஆயிரம் கோடி ரூபாய் சேமிப்பு கிடைத்திருப்பதாகவும் அமைச்சர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

நாட்டு நலனை மட்டுமே கருத்தில்கொண்டு பிரதமர் திரு நரேந்திர மோடி அயராது பாடுபட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திரு எல்.முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் அனைத்தையும் பிரதமர் நிறைவேற்றியுள்ளதாக குறிபபிட்டுள்ளார்.

கடந்த 11 ஆண்டுகளாக பிரதமர் திரு நரேந்திர மோடி ஆற்றிவரும் பணி, நாட்டின் வளர்ச்சியை உறுதி செய்துள்ளதாகவும் திரு எல்.முருகன் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

அரசு உண்டு உறைவிடப்பள்ளி மாணவி ராஜேஷ்வரியின் உயர்கல்வி செலவினை தமிழக அரசே ஏற்கும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், ரஜேஷ்வரியை போன்று பலர் சேருவதுதான் ஐ ஐ டி-க்கு உண்மையான பெருமையாக இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜே இ இ நுழைவுத்தேர்வில் தேசிய அளவில் 417-ஆவது இடத்தை பிடித்து சென்னை ஐ ஐ டி-யில் படிப்பதற்கான வாய்ப்பினை ராஜேஷ்வரி பெற்றதையடுத்து முதலமைச்சர் இக்கருத்தினை பதிவு செய்துள்ளார்.

<<<<<<>>>>>

திமுக-வுக்கு எதிராக ஒருமித்த கருத்துடைய கட்சிகள் அனைத்தும் ஓரணியில் திரள வேண்டியதன் அவசியத்தை பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்காக தவெக தலைவர் திரு விஜய்க்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

விவசாயிகள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்பட்டு வருவதாக அவர் குற்றம் சாட்டினார்.

சட்டம் - ஒழுங்கை முறையாக பராமரிக்க உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டார்.

**<<<<<<>>>>>**

இனி . . .

மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள்.

(Sound Byte – Music – 15 Sec)

சேவை, நல்லாட்சி, ஏழைகளின் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு கடந்த 11 ஆண்டுகளாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதன் காரணமாக நாடு பெரிய அளவிலான மாற்றங்களை கண்டுள்ளது.

இதுதொடர்பான செய்தி தொகுப்பில் இன்று இளையோரின் நலனுக்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு குறித்த திட்டங்கள் இடம்பெறுகிறது.

(Voice Over / Closing Music – 146 Sec)

**<<<<<<>>>>>**

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

கன்னியாகுமரி மாவட்டம் களியக்காவிளையில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் பேருந்து நிலையம் மற்றும் மார்த்தாண்டம் நவீன காய்கறி விற்பனை சந்தைக்கான கட்டுமானப்பணிகளை மாநில அமைச்சர் திரு மனோ தங்கராஜ் இன்று ஆய்வு செய்தார்.

---------------

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி இஸ்லாமிய பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மஞ்சப்பை பயன்பாடு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆட்சியர் திருமதி சிவ சௌந்தரவல்லி தலைமையில் நடைபெற்றது.

-----------------

நாமக்கல் மாவட்டத்தில் வனத்துறை சார்பில் மரக்கன்றுகள் நடும் பணியினை ஆட்சியர் திருமதி உமா இன்று தொடங்கிவைத்தார்.

-----------------

மதுரை மாவட்டத்தில் ஆட்சியர் திருமதி சங்கீதா தலைமையில் மாணவர்களுக்கான சிறப்பு குறைதீர் முகாம் இன்று நடைபெற்றது.

--------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு கிடங்கினை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக்கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் இன்று ஆய்வு செய்தார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை வில்வித்தை போட்டியின் மகளிர் குழு பிரிவில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

துருக்கியின் Antalya -யில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா 240-க்கு 236 என்ற புள்ளிக்கணக்கில் இங்கிலாந்தை வென்றது.

---------------

இந்தோனேஷியா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 16-21, 21-18, 22-20 என்ற செட் கணக்கில், டென்மார்க்கின் Rasmus Kjaer – Frederik Sogaard இணையை வென்றது.

-----------------

ஆசிய கோப்பை மகளிர் ஹாக்கிப்போட்டிக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, இப்போட்டி, சீனாவின் Hangzhou–வில் செப்டம்பர் மாதம் 5-ஆம் தேதி தொடங்கி, 15-ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

------------------

ஆசிய கோப்பை கால்பந்து தகுதிச்சுற்றுப் போட்டியில் ஹாங்காங்குக்கு எதிரான போட்டியில் பங்கேற்பதற்கான 26 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<END>>>>>